# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:101:2019 01.01.2019

அன்பார்ந்த தோழர்களே !

## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்

மாற்றமே உலக நியதி, மாறாதது மாற்றம் மட்டுமே. இந்தப் பேரண்டத்திலுள்ள அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மாற்றங்களை ஏற்பதில் மனித மனம் பல சிக்கல்களைச் சந்திக்கிறது. எந்த மாற்றத்தையும் எளிதில் மனம் ஏற்பதில்லை. மாற்றத்தை ஏற்பவர்களும், மாற்றங்களுக்கு காரணமானவர்களும், மாற்றங்களுக்கு தகுந்தாற்போல தன்னை மாற்றிக்கொள்பவர்களும் வாழ்வில் வெற்றி பெறுகிறார்கள். காய்ந்த சருகாக 2018 விழுந்து, 2019ஆம் ஆண்டு துளிர்விட்டுள்ள இந்த வேளையில், உங்கள் அனைவருக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் சங்கத்தின் சார்பில் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த ஆண்டு தமிழகத்தின் பல கடலோர மாவட்டங்கள் கஜா புயலினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. நமது அமைப்பின் சார்பில் உடனடியாக தஞ்சை மாவட்டத்தில் ஒரு கிராமத்திலும், நாகை மாவட்டத்தில் ஒரு கிராமத்திலும் உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட 10 மாவட்டங்களைச் சார்ந்த ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வட்டியில்லாத கடன் வழங்க நமது சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. வங்கியின் கொள்கையின் அடிப்படையில், அதிகாரிகளுக்கு ஒரு லட்சமும், எழுத்தர்களுக்கு ரூ.75,000/-மும், துணைநிலை ஊழியர்களுக்கு ரூ.50,000/-மும் கடன் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டில், நமது அண்டை மாநிலமான கேரளமும் வெள்ளத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

அமெரிக்கா, வட கொரியா நாடுகளுக்கிடையே, சிங்கப்பூரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் காரணமாக போர் அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளது கடந்த ஆண்டின் ஒரு முக்கிய நிகழ்வாகும். இந்திய அரசியல் சாசனத்தின் 377வது விதி உச்ச நீதிமன்ற தீர்ப்பால் மாற்றப்பட்டு, சுயபாலின்பம் சட்டவிரோதமற்றது என்ற நிலை ஏற்பாட்டுள்ளது. மேலும், உச்ச நீதி மன்றத் தீர்ப்பின் காரணமாக, கேரளத்திலுள்ள அய்யப்பன் ஆலயத்தில் பெண்களை அனுமதிக்கவேண்டிய நிலை ஏற்பாட்டுள்ளது. பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக, தீர்ப்பு இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கடந்த ஆண்டில், ரிசர்வ் வங்கியின் இருப்பிலுள்ள 7 லட்சம் கோடி ரூபாயில், மத்திய அரசு சுமார் 3.50 லட்சம் கோடியை பெற முயற்சி மேற்கொண்டது. அதன் காரணமாக கவர்னராக இருந்த திரு.உர்ஜித் பட்டேல் அவர்கள் பதவி விலகினார். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திரு.சக்திகாந்த தாஸ் அவர்கள், இந்தத் தொகையை அரசுக்கு வழங்கும் நோக்கில், இது பற்றி பரிந்துரைக்க ஒரு குழுவை நியமித்துள்ளார்.

மத்திய நிதியமைச்சர், அந்தக் குழு எந்தப் பரிந்துரையையும் வழங்கும் முன்பாகவே, இந்த தொகை மத்திய அரசுக்கு தேவையில்லை, அது பொதுத்துறை வங்கிகளுக்கு முதலீடாக மட்டுமே வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது, குழு எடுக்கவுள்ள முடிவை சுட்டிக்காட்டுவதாகவே அமைந்துள்ளது.

கடந்த 31.03.2018 அன்று பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகள் அனைத்தும், பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைக்கப்பட்டது. இது வரை இலாபத்தில் இயங்கிவந்த பாரத ஸ்டேட் வங்கி முதல் முறையாக நட்டத்தை சந்தித்துள்ளது. இந்த இணைப்பின் காரணமாக சுமார் 7000 கிளைகள் மூடப்பட்டுள்ளன, அடுத்த நடவடிக்கையாக பாங்க் ஆப் பரோடா, விஜயா வங்கி, தேனா வங்கி ஆகியவற்றை இணைக்கும் நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது. இதற்கு எதிராக அனைத்து வங்கி ஊழியர்களும், அதிகாரிகளும் இணைந்து கடந்த 26.12.2018 அன்று ஒரு நாள் வேலைநிறுத்தம் மேற்கொண்டனர்.

யூனியன் வங்கி கடந்த 2017-2018 நிதியாண்டில், வங்கி துவங்கியபின் முதல் முறையாக நட்டத்தை சந்தித்தது. இருப்பினும், கடந்த இரண்டு காலாண்டுகளாக வங்கி இலாபம் ஈட்டத்துவங்கியுள்ளது மகிழ்ச்சிகரமான நிகழ்வாகும். 1919ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நமது வங்கி 99 ஆண்டுகளை நிறைவு செய்து 11.11.2018 அன்று தனது 100வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. 11.11.2019 அன்று 100 ஆண்டுகளை நிறைவு செய்யும் போது, ஊழியர்களுக்கு என்றும் நினைவில் நிற்கும் வகையில், சிறப்பான பரிசு வழங்கவேண்டும் என்று நமது அகில இந்திய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு, இந்தியாவை ஒன்றிணைக்கும் பணியை சிறப்பாக ஆற்றியமைக்காக திரு.சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களுக்கு ரூ.3000 கோடி செலவில் கடந்த ஆண்டு சிலை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது நாடு இருக்கும் நிலையில், மக்கள் நலனுக்கான வளர்ச்சித்திட்டங்களை புறந்தள்ளி, நிதியை இந்தகைய செலவுகளுக்கு ஒதுக்கியமைக்காக அரசுக்கு அவப்பெயர் ஏற்பாட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில், இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு.அட்டல் பிகாரி வாஜ்பாய் அவர்களும், தமிழகத்தின் முன்னாள் முதல்வர் திரு.மு.கருணாநிதி அவர்களும் காலமானார்கள். தமிழகத்தில், சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் நெகிழி பொருட்களுக்கு 01.01.2019 முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ஐந்து மாநில சட்டசபைகளுக்கு நடைபெற்ற தேர்தலில், மத்தியில் ஆளும் கட்சி மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. எதிர்கட்சிகளின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது, 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மத்திய தேர்தலில் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் பணமதிப்பிழப்பு நடவடிக்கை, சரக்கு மற்றும் சேவை வரி ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள், விவசாயிகள் தற்கொலை, வேலையின்மை ஆகியற்றின் பின்னணியில், அரசு நிதியை சிலைகளுக்கு செலவிடுவது மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பின்னணியில், குறைந்தபட்ச ஊதியம் ரூ.18,000/-, அனைவருக்கும் சமூக பாதுகாப்பு, பொதுத்துறை வங்கிகள்/நிறுவனங்கள் பாதுகாப்பு, வருங்கால வைப்புநிதி உயர்வு, பணிக்கொடை உயர்வு, குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.3,000/-,

அனைவருக்கும் பழைய ஓய்வூதியத்திட்டம் ஆகிய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மத்திய தொழிற்-சங்கங்களும், தொழில்வாரி சங்கங்களும் இணைந்து வரும் ஜனவரி 8-9 இரண்டு நாட்கள் வேலைநிறுத்ததிற்கு அழைப்பு விடுத்துள்ளது. வங்கித்துறையில், அனைத்து ஊழியர் சங்கங்களும் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. இந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட வேண்டியது நம் அனைவரது கடமையாகும்.

மீண்டும் ஒருமுறை இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்